

# மூன்றாம் இழுப்பு

4

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

அங்கே தனிச்சிறப்பு வாய்ந்த மூன்று சிகரங்களிருந்தன. “அம்மூன்று சிகரங்களும், முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் இழுப்புகளாம். அந்த முதலாவது சிகரம் உனது ஊழியத்தின் முதலாம் பாகமாயிருந்தது, பின்பு ஒரு சிறிய மலை, உனது முதலாம் இழுப்பு நல்ல உயரமாயிருந்தது” என்று அவர் கூறினார். கையில் தோன்றும் அந்த அடையாளம்” உங்களுக்குத் தெரியுமல்லவா? அதன் பிறகு சற்று இடைவெளி உண்டாயிருந்தது. நான் அதிக களைப்புறாதபடி, இளைப்பாறின நேரமது. உங்களில் அநேகருக்கு ஞாபகமிருக்கும். அதன் பிறகு இரண்டாம் இழுப்பாகிய பகுத்தறிதல் வரம் வந்தது. இப்பொழுது சில ஆண்டுகளாக எனக்கு ஒய்வு உள்ளது போன்று காணப்படுகின்றது. அதற்கு தான் அந்த சிறிய சிகரங்கள் ஒப்புமையாய் இருக்கின்றன. எனது ஊழியம் முழவு பெறவில்லையெனக் கருதி நான் திரும்பி பார்க்கிறேன். அதன் பிறகு மூன்றாம் இழுப்பானது வருகிறது.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து



## செய்தி: 63-06-23M இடைவெளியில் நிற்றல்

148. நான் வண்டியை நிறுத்தி மேல் நோக்கின போது, ஏழு சிகரங்களுள்ள அந்த மலையை பார்த்தேன். "முக்கியமானதொன்றைக் காண விரும்புகிறாயா?" என்று கூறின ஒரு சத்தத்தைக் கேட்டேன். அம்மலையின் மேல் ஏழு சிகரங்கள் இருந்தன. அந்த ஒரு மலை பல மைல்கள் தூரம் வியாபித்திருந்தது. அதற்கு பிறகு மலைகளே கிடையாது. அது

கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அமைந்திருந்தது. அதின் உச்சியின் மேல் பனி மூடப்பட்டிருந்தது.

149. முதல் இரண்டும் சிறிய சிகரங்களாயிருந்தன. பிறகு ஒரு பெரிய சிகரம். அதன் பிறகு வேறொரு சிறிய சிகரம், அதற்கப்பால் ஒரு பெரிய சிகரம். அதற்கப்பால் ஒரு சிறிய சிகரம், அதன் பிறகு ஒரு நீண்ட பெரிய பனி மூடிய மலை, “ஆண்டவனே, அதின் அர்த்தம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை” என்று நான் கூறினேன்.

150. “அங்கே எத்தனை சிகரங்களுள்ளன?” என்று என்னைக் கேட்டார்.

151. நான் “ஏழுசிகரங்கள்” என்று கூறினேன்.

152. உனது பெயரில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன? என்று வினவினார். ஆங்கிலத்தில் B-r-a-n-h-a-m---M-a-r-r-i-o-n என்று ஒவ்வொரு பெயரும் ஏழு எழுத்துக்கள் உள்ளதாக இருக்கிறது.

153. அங்கே தனிச்சிறப்பு வாய்ந்த மூன்று சிகரங்களிருந்தன. “அம்மூன்று சிகரங்களும், முதலாம், இரண்டாம், மற்றும் மூன்றாம் இழுப்புகளாம். அந்த முதலாவது சிகரம் உனது ஊழியத்தின் முதலாம் பாகமாயிருந்தது, பின்பு ஒரு சிறிய மலை, உனது முதலாம் இழுப்பு நல்ல உயரமாயிருந்தது” என்று அவர் கூறினார். கையில் தோன்றும் அந்த அடையாளம்" உங்களுக்குத் தெரியுமல்லவா? அதன் பிறகு சற்று இடைவெளி உண்டாயிருந்தது. நான் அதிக களைப்புறாதபடி, இளைப்பாறின நேரமது. உங்களில் அநேகருக்கு ஞாபகமிருக்கும். அதன் பிறகு இரண்டாம் இழுப்பாகிய பகுத்தறிதல் வரம் வந்தது. இப்பொழுது சில ஆண்டுகளாக எனக்கு ஓய்வு உள்ளது போன்று காணப்படுகின்றது. அதற்கு தான் அந்த சிறிய சிகரங்கள் ஒப்புமையாய் இருக்கின்றன. எனது ஊழியம் முடிவு பெறவில்லையெனக் கருதி நான் திரும்பி பார்க்கிறேன். அதன் பிறகு மூன்றாம் இழுப்பானது வருகிறது.

154. மூன்று என்னும் எண் முடிவான எண்ணாயிருக்கிறது. அடுத்த சிகரம்

கிருபையின் எண்ணாகக் கருதப்படுகிற ஐந்து ஆகும். அதன் பின்பு, உள்ள சிகரம் பூரணத்தின் எண்ணாக உள்ள ஏழு ஆகும். “ஆறு நாட்கள் நீ வேலை செய்து வாரத்தின் கடைசி நாளாகிய ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பாயாக! அது காலத்தின் முடிவாயிருக்கிறது”. நான் நின்று, பில்லியிடம் அவைகளைக் காண்பித்து, அவைகளை உற்று நோக்கினேன். - யாத் 20:9,10 உபா 5:13,14

155. மேலும், ஆண்டவர் கூறினார், "அது உன் மனதில் நிலைத்திருக்கட்டும். எப்பொழுதாவது உன் மனதில் சந்தேகம் உண்டானால், இந்த இடத்தை ஞாபகப்படுத்திக்கொண்டு, இங்கு திரும்பிவா” என்று சொன்னார்.

156. அப்பொழுது பில்லி என் தோளில் தட்டி, “தந்தையே, கிழக்கே பாருங்கள்” என்று கூறினான். அது எவ்வாறு சம்பவித்ததோ நான் அறியேன், சாலையின் கிழக்குப் பாகத்தில், அங்கே குப்பை, செத்தைகள் திடீரென எரிந்து கொண்டிருந்தன. எந்தவொரு நகரத்திற்கும், பல நூற்றுக்கணக்கான மைல்களுக்குப்பால்

உள்ள அந்த இடத்தில், அந்த குப்பைகூளங்கள், சாலையின் இடது பக்கம் எரிந்து கொண்டிருந்தன.

157. நான் ஊழியக்களத்திற்கு திரும்பிக் கொண்டிருக்கிறேன். ஆமென். வயோதிபமோ, வாலிபமோ எப்படியாயினும் மரணம் என்னை விடுவிக்குமளவும் நான் தேவனுக்குக் கீழ்ப்படிவேன். நான் கர்த்தருடைய காரியங்களில் தவறி விட்டேன், வேண்டுமென்று அல்ல.... இவ்விஷயத்தை இங்கு கூற நான் விரும்புகிறேன். எந்தவித தோஷமுமின்றி, இயேசுகிறிஸ்து பிரத்தியட்சமாகும்படி நான் விரும்புகிறேன். இத்தனை ஆண்டு காலமாக, சொல்லப்பட்ட எந்தவொரு விஷயமும் அப்படியே நிறைவேறியிருக்கிறதேயல்லாமல், முன்னுரைத்த எதுவும் நிறைவேறாமற் போகவில்லை. ஆயிரக்கணக்கில் என்ன சம்பவிக்கும் என்பதைப் பற்றிய முன்னுரைத்தல்கள், மற்றும் இருதயத்தின் சிந்தைகளை பகுத்தறிந்து சொல்லுதல் ஆகியவைகள் பிரசங்க பீடத்திலிருந்து

கொடுக்கப்பட்டுள்ளன, கூறினவாறே அவை நிறைவேறவில்லை என்று நிருபிக்க முடியுமா என்று நான் சவால் விடுகிறேன். ஒவ்வொரு எழுத்தின்படியும் அவைகள் நிறைவேறின. சபையானது அதை விசுவாசிக்குமெனில், "ஆமென்" என்று சொல்வீர்களாக. (சபையார் "ஆமென்" எனக் கூறுகிறார்கள் - ஆசிரியர்) இவ்வுலகத்தில் அவைகளை மறுத்துரைக்க ஒருவரும் இல்லை. கிரியை செய்யும்படி ஒரு மனிதனை தேவன் உந்தித்தள்ளுகிறாரென்றால், அப்படியிருந்தும் அவனுக்கென்று தேவன் பேசும்வரை அவன் அசையாமல் இருப்பானென்றால் அக்காரியத்தில் விசுவாசம் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. தேவன் தான் உன்னை ஒரு காரியத்திற்கு தள்ளிவிடுகிறார். ஒரு மனிதனும் ஊழியத்திற்கெதிராக ஒரு வார்த்தை கூட சொல்ல முடியாதபடி ஊழியமானது அவ்வளவு வளர்ந்துள்ளது. ஆனால் இது முதற்கொண்டு, நீங்கள் செவி கொடுக்குமுன்னர், நான் முதலில் கர்த்தருடைய நாமத்தினால் உங்களோடு

பேசட்டும். ஏனெனில், நான் விசுவாசத்தினால் புறப்பட்டு செல்ல வேண்டும். அது சரி அல்லது தவறு என்று எப்படி எண்ணியபோதிலும் நான் அதை விசுவாசத்தினால் செய்ய வேண்டும். எது சரியென்று நான் எண்ணுகிறேனோ அதை என்னால் இயன்றவரை சிறப்பாக செய்ய விழைவேன். இதுவரை அவர் என்னிடம் போய் செய்யும்படி சொல்லுகிற வரையிலும் நான் காத்திருந்து செய்தபடியால், அதில் தவறே இருக்கவில்லை. நான் அவருக்காக காத்திருந்தேன். எனவே அது நானல்ல, அவரேதான்!

158. ஆனால் பாருங்கள், மகத்தான பரிசுத்த பவுல் கூட ஒரு சமயத்தில் இக்கட்டான சூழ்நிலையில் இருந்தார். அநேக சமயங்களில் தேவன் தனது ஊழியக்காரர்கள் பிசகான காரியங்களைச் செய்ய அனுமதித்து விடுகிறார். இவற்றை நிரூபிப்பதற்காக, மானிடர் தவறுகள் செய்யக் கூடும். ஆனால் தேவனோ தவறு செய்யவே மாட்டார். ஆனால் இப்பொழுது நான் ஊழியக்களத்திற்கு பிரசங்கங்களுக்காக செல்வேனானால் இப்பொழுதுள்ள என்

தீர்மானத்தின்படி நான் முன்னதாக கூட்டங்களை ஒழுங்கு செய்ய வேண்டியதாயிருக்கும். ஒருக்கால், நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற அந்த மகத்தான வேளை வருவதற்குரிய சமயம் இதுவாயிருக்கலாம். அப்படியானால் நிச்சயமாக இது தன்னில் தானே மகத்தானதாக, மகத்தான வெற்றியை தேவ அன்பில் கொண்டு வருவதாக இருக்கும். (வினையுரிச்சொல்லுக்கு முன் உள்ள வினைச்சொல்) அப்பொழுது அது, தெய்வீக அன்பாகிய தேவனாகவேயிருக்கிறது. மக்களுக்காக இடைவெளியில் நிற்கும்படி முன்னால் ஓடி இடைவெளியில் நிற்பதற்கு தேவனுடைய அன்பே அவசியமாயுள்ளது.



**இந்த ஏழாம் தூதன் அவனுடைய செய்தியைப் பிரசங்கிக்கும் போது... பாருங்கள், முதலாம் இழுப்பு – தெய்வீக சுகம் அளித்தல். இரண்டாம் இழுப்பு – தீர்க்கதரிசனம் உரைத்தல், மூன்றாம் இழுப்பு வேதத்திலுள்ள இரகசியங்களை வெளிப்படுத்துதல்.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-07-25M கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள்

---

259. லூக்கா 17:30ஐயும் மல்கியா 4:5ஐயும் ஒப்பிட்டுப் பாருங்கள். யந்நேயும், யம்பிரேயும், அந்த காலத்திற்கென்று அபிஷேகம் பெற்று வார்த்தையாய் விளங்கின மோசேக்கு எதிர்த்து நின்றது போல், இவர்களும் (பன்மை -இவர் (ஒருமை) அல்ல - சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

260. மனுஷகுமாரன் வெளிப்படும் அதே நாளில் (வெளி.10:1-7) ஏழாம் தூதனின் செய்தி முத்திரைகளைத் திறக்கும். ஏழாம் தூதன் மனுஷகுமாரனல்ல. ஆனால் அந்த தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகின்றார்.

இவ்விருவரும் யாரென்று இப்பொழுது புரிகின்றதா? அது தான் இதுவரை உங்களுக்குப் புரிந்து கொள்ள முடியாத கடினமாக செயலாய் இருந்து வருகின்றது. ஏழாம் தூதன் மனுஷ குமாரன் அல்ல; ஆனால்

அவர் மக்களுக்கு மனுஷகுமாரன் யாரென்பதை வெளிப்படுத்துகின்றார். ஏனெனில் ஜீவன் பதரை விட்டு சென்று விட்டது. அது கோதுமை மணிக்குள் பிரவேசித்து விட்டது. அதை ஸ்தாபனமாகச் செய்யமுடியாது.

அந்த நாளில் அபிஷேகம் பெற்ற யந்நேயும் யம்பிரேயும் (விசுவாசிகளைப் போல் பாவனை செய்பவர்கள், அவிசுவாசிகள், ஸ்தாபனங்கள், பெந்தெகொஸ்தே ஸ்தாபனம்) உண்மையான கோதுமை மணிக்கு விரோதமாய் நிற்பார்கள். அவர்களை விட்டு விடுங்கள். அவர்களுடைய மதிகேடு வெளியாகும். இப்பொழுது உங்களுக்குப் புரிகின்றதா?

261. ஏழாம் தூதன் ஏழாம் சபையாகிய லவோதிக்கேயா சபையின் காலத்தில் முழக்கமிடும் போது... (சபை ஸ்தாபனமாக மாறி, பெந்தெகொஸ்தரும் ஒரு ஸ்தாபனமாக ஆன போது, தூதனின் சத்தம் முழங்கினது). ஏழாம் தூதனின் முழக்கம் அந்தக் காலத்துக்குக் கண்டனமாக அமைந்திருக்கும். அவ்வாறே மார்டின் லூதரின் முழக்கம், அவர்

காலத்திலிருந்த கத்தோலிக்கர்க்கும், வெஸ்லியின் முழக்கம், அந்த காலத்திலிருந்த லூத்தரன்களுக்கும் கண்டனமாக அமைந்திருந்தன. பெந்தெகொஸ்தேயினரும், அவர்கள் காலத்திலிருந்த விசுவாசியாதவர்களுக்குக் கண்டனமாக அமைந்திருந்தனர்.

இப்பொழுது ஜீவன் எங்கு சென்றுள்ளது? அது ஸ்தாபனங்களை விட்டு புறம்பே சென்றுவிட்டது. அது இப்பொழுது பதரினுள் இல்லை. அது கோதுமை மணிக்குள் இருக்கின்றது. இந்த கோதுமை மணி பெந்தெகொஸ்தே ஸ்தாபனத்திற்குக் கண்டன மாக அமைந்துள்ளது.

262. இந்த ஏழாம் தூதன் அவனுடைய செய்தியைப் பிரசங்கிக்கும் போது... பாருங்கள், முதலாம் இழுப்பு - தெய்வீக சுகம் அளித்தல். இரண்டாம் இழுப்பு - தீர்க்கதரிசனம் உரைத்தல், மூன்றாம் இழுப்பு வேதத்திலுள்ள இரகசியங்களை வெளிப்படுத்துதல். வார்த்தையின் இரகசியங்களை வெளிப்படுத்த தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் மேலானவர்

யாருமில்லை. தீர்க்கதரிசியும், தேவனுடைய வார்த்தையின் மூலமாகவே நிரூபிக்கப்படுவான். மூன்றாம் இழுப்பு என்பது, வேதத்தில் முத்திரை செய்யப்பட்டு, ஏழு முத்திரைகளின் கீழ் இதுகாறும் மறைக்கப்பட்டிருந்த இரகசியங்களை வெளிப்படுத்தலாகும்.

இது நிறைவேறும் அந்நாளில், மோசேயின் காலத்தில் நிகழ்ந்தது போல், பாவனை செய்பவர்களாகிய யந்நேயும் யம்பிரேயும் மறுபடியும் தோன்றுவார்கள்.

263. நான் முடிக்கும் முன்பு, மூன்று காரியங்களைக் கூற விரும்புகிறேன். மூன்று காரியங்கள் ஏற்கனவே நிகழ்ந்து விட்டன. வேறு மூன்று காரியங்கள் இப்பொழுது உங்கள் முன்னால் கிடத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

264. முதலாவதாக: உலகம் இப்பொழுது சோதோமின் நிலையில் இருக்கின்றது. அது அந்நிலைக்கு வரும் என்று இயேசு கூறியுள்ளார். உலகத்திலுள்ள மாறுபாடுகளைப் பாருங்கள். பெண்கள் ஆண்களைப் போன்றும்,

ஆண்கள் பெண்களைப் போன்றும் தோற்றமளிக்க விரும்புகின்றனர். ஆண்கள் பெண்ணின் தன்மையைப் பெற்று பிசாசு பிடித்தவர்களாய் மோசமான நிலையை அடைந்துள்ளனர். ஆனாலும் அவர்கள் அதை அறியாமல் இருக்கின்றனர்.

265. இரண்டாவதாக: தேவனுடைய வார்த்தை உரைத்துள்ளபடி, யந்நேயும் யம்பிரேயும் தோன்றுவார்கள்.

266. மூன்றாவதாக: இந்த சமயத்தில்தான் மனுஷகுமாரன் வெளிப்படுவார்.

267. விசுவாசிகள், விசுவாசிகளைப் போல் பாவனை செய்பவர்கள், அவிசுவாசிகள் இம்மூன்று தரத்தாரும் நம்மிடையே காணப்படுகின்றனர். தேவனுடைய உண்மையான வார்த்தை இப்பொழுது உறுதிப்பட்டு வருகின்றது. விசுவாசிகளைப் போல் பாவனை செய்கிறவர்களோ இச்செயல்களைப் பாவனை செய்து வருகின்றனர். அவிசுவாசிகள் இதை முற்றிலும் நிராகரிக்கின்றனர். "ஆனால் சாயந்திர

நேரத்தில் வெளிச்சம் உண்டாகும் மகிமையின் வழியை நீ நிச்சயம் கண்டுகொள்வாய்" இராஜ்ஜியங்கள் உடைகின்றன இஸ்ரவேல் உயிர் பெற்றெழுகின்றது இது வேதம் கூறின அடையாளம் புறஜாதிகளின் நாட்கள் எண்ணப்பட்டு விட்டது (சோதோம்) அம்புகள் தொடுக்கப்பட்டாயிற்று சிதறி போனவளே உன் சுதந்திர வீதத்திற்குத் திரும்பு மீட்பின் நாள் சமீபமாயிற்று பயம் மனிதனின் இருதயத்தை சோரப் பண்ணுகிறது தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு, உன் விளக்கை ஆயத்தம் செய் அப்பொழுதுதான் மணி நேரத்தின் வார்த்தையை உன்னால் பார்க்க முடியும்.) மேல் நோக்கிப் பார், உன் மீட்பு சமீபமாயிற்று! கள்ளத் தீர்க்கதரிசிகள் பொய்களை பேசுகின்றனர் (அபிஷேகம் பெற்றவர் இங்கிருப்பார்கள் எனக் கூறப்பட்டுள்ளது) தேவ சத்தியமான இயேசுவே, கிறிஸ்துவும் நமது தேவனுமாயிருக்கிறார் என்பதை மறுதலிக்கின்றார்கள்.

அதை அவர்கள் விசுவாசிக்கவில்லை. அவ்விதமாக இருக்கும் என வேதம் கூறுகின்றது.

ஆனால் நாமோ, அப்போஸ்தலர் பாதையில் நடப்போம் (அதே வெளிச்சம்! பிள்ளைகளின் இருதயத்தை அவர்கள் பிதாக்களுக்கு திருப்புதல்) மீட்பின் நாள் சமீபமாயிற்று பயம் மனிதனின் இருதயத்தை சோர செய்கின்றது (பூமியானது சிதைந்துக் கொண்டிருக்கின்றது) ஒ! தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு உன் விளக்கை ஆயத்தம் செய் மேல் நோக்கிப் பார், உன் மீட்பு சமீபமாயிற்று!

அதை நீங்கள் விசுவாசிக்கின்றீர்களா? இப்பொழுது நாம் தலை வணங்குவோம்.



**அந்த சத்தம் மறுபடியும், "அது ஒரு ராஜாவின் பட்டயம் அல்ல, அது ராஜாவின் பட்டயம் (The King's Sword), தேவனுடைய வார்த்தை" என்றது. அது மேலும், "பயப்படாதே. அது மூன்றாம் இழுப்பு. அது உன் ஊழியத்தை உறுதிப்படுத்தும் ஒன்றாகும்" என்றது.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-07-25E மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன

---

55. இப்பொழுது புதிய ஏற்பாட்டில் யோவான்;14:12ஐப் பார்ப்போம்.

என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும், செய்வான் என்று இயேசு கூறினார்.

மேலும், லூக்கா;17:22 முதல் 30 வசனங்களில், அவர், லோத்தினுடைய நாட்களில் நடந்தது போல, சோதோம் எரிவதற்கு முன்பு. மனுஷ குமாரன் திரும்பி வரும் போது, மனுஷ குமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும் என்று கூறியுள்ளார்.

ஓ, வேத வசனங்களைப் பாருங்கள்! "மனுஷகுமாரன்," நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிற இயேசு கிறிஸ்து, ஸ்தாபனங்களைக் கடந்து வளர்ந்து, மரத்தின் உச்சியை அடைந்து விட்டார். அவர் யோவான்

14ல், இல்லை 15ல், என்ன கூறினார்? "என்னில் கனி கொடாதிருக்கிற கொடி எதுவோ அது அறுத்துப் போடப்பட்டு, நெருப்பில் சுட்டெரிக்கப்படும். கனி கொடுக்கிற கொடி எதுவோ அது சுத்தம் பண்ணப்படும்."

56. ஓ, இந்த சிறு கழுதையின் மேல் தாழ்மையுள்ளவராய் ஏறி வரும் அவருடன் கூட, எவ்வித சந்தேகமும் ஸ்தாபனமுமின்றி, கர்த்தரின் நாமத்தினாலே வருகிற ராஜாவுக்கு ஓசன்னா என்று ஆர்ப்பரித்து வரும் அந்த சிறு கூட்டத்தாரின் மேல், இந்த கடைசி நாட்களில் உண்மையான முன் மாரியும், பின் மாரியும் பொழியும். இங்றைய காரியம் என்ன? மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?

57. சில ஆண்டுகளுக்கு முன்பு இந்த பிரசங்கபீடத்தில் நின்று கொண்டு, " இவர்கள் ஒரு முளையை (stake) உன் வீட்டின் முன்னால் அடித்து, உன் வாசல் கதவை நகர்த்தி வைக்கப் போகும் ஒரு நாள் வரும். நீயோ கோபங்கொள்ளாமல், வேறு வழியாகச் செல்வாய்" என்று பரிசுத்த ஆவியானவரால்

உரைக்கப்பட்டது என்று கூறினேன். தரிசனத்தில், என் வாசல் கதவு பிடுங்கப்பட்டு மலைபாகத்தில் கிடத்தியிருப்பதைக் கண்டேன், என் வீட்டின் முன்னால் உள்ள மலைதோண்டப்பட்டு, அங்கிருந்த பலகைகளும் மற்றவைகளும் உடைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்... நான் பார்த்த போது. "ரிக்கி" ஒருவன் என் வாசல் கதவைப் பிடுங்கிக் கொண்டிருந்தான். நான் அவனிடம், நீ ஏன் என்னிடம் முன்பே கூறவில்லை?" என்று கேட்டபோது, அவன் கடுமையாக என்னிடம் நடந்து கொள்ளத் தொடங்கினான், அவனை நான் அடிக்க வேண்டியதாயிற்று. நான், “நான் குத்து சண்டையிடுவதை நிறுத்தின பின்பு இதை செய்ததே சிடையாது, ஆனால் நீ அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று கூறி அவனுக்கு ஒரு குத்து கொடுத்து தரையில் வீழ்த்தினேன். அவனை மறுபடியும் தூக்கி நிறுத்தி, குத்து கொடுத்து தரையில் வீழ்த்தினேன். இப்படியாக மூன்று அல்லது நான்குமுறை செய்து, மலைப் பாகத்தில்

உதைத்து தள்ளினேன். நான் திரும்பி வந்து, " அதுதவறு" என்று கூறி மறுபடியும் அவனிடம் சென்று அவனைத் தூக்கி நிறுத்தி அவனுடன் கைகுலுக்கி, "உன் மேல் எனக்குக் கோபமில்லை, என்னிடம் நீ அப்படி பேசக் கூடாது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்" என்றேன். நான் திரும்பி வந்த போது, பரிசுத்த ஆவியானவர் கதவருகே நின்று கொண்டிருந்தார். அவர், "முளை அடிக்கப்படும் போது, வேறு வழியாகச் செல். மேற்கு நோக்கிப் போ" என்றார்.

எனக்குத் தேவை எல்லாமே இந்த புத்தகமே,

இது ஒரு நல்ல பரிகாரம், (என் கஷ்டங்களினின்று விலக இது வழி காண்பிக்கின்றது.)

ஆமேன். "அந்த புத்தகம் வார்த்தை, வார்த்தை தேவன்." உங்கள் கஷ்டங்களினின்று வேறு வழியாக செல்ல, நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அது உங்களுக்கு ஆலோசனை கூறும்.

58. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, என் வீட்டுக்குப் பக்கத்திலுள்ள சந்தில் வசிக்கும் என் நண்பர் நகர நிலமளப்பவர் (City Surveyor) ஒரு முளை அடிக்கும் சத்தத்தைக் கேட்டேன். நான் அங்கு சென்று, "மட் (Mud), என்ன விஷயம்?" என்றேன். அவர் திரு. கிங் என்பவரின் மகன், என் நண்பர்.

அவர், "பில்லி, அவர்கள் சாலையை விரிவுபடுத்துகின்றார்கள்" என்றார்.

"ஒருக்கால் அது அந்த பாலமாயிருக்கலாம்" என்று நான் கூறினது உங்களுக்கு நினைவிருக்கும். நான் சகோ. உட்டிடம், "உங்கள் சொத்தை வைத்திருங்கள். ஒருக்கால் அந்த பாலம் இந்த வழியாக வரக்கூடும்" என்றேன், சாலை உடைக்கப்பட்டு, கற்களும், பாறைகளும் எல்லாவிடங்களிலும் எறியப்பட்டிருக்தன... நான், "உங்கள் சொத்தை வைத்திருங்கள்" என்றேன்.

பின்பு நான்... அது நடக்கப் போகின்றது என்று திரு. கிங் என்னிடம் கூறினார். நான் உள்ளே சென்று என் மனைவியிடம், "தேனே,

இதைக் குறித்து ஏதோ ஒன்று எழுதி வைக்கப்பட்டுள்ளது. அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பது. அது எங்கோ உள்ளது" என்றேன்.

59. நான் உள்ளே சென்று என் புத்தகத்தைக் கொண்டு வந்தேன். "அது நிறைவேறும்..." என்று அதில் எழுதி வைக்கப்பட்டிருந்தது. எட்டு ஆண்டுகள் கழித்து அது நிறைவேறினது!

அதை நான் கண்ட போது என் மனைவியிடம், "தேனே, நாம் மேற்குக்கு செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டதும் என்றேன்."

அதற்கு இரண்டு நாட்கள் கழித்து, நான் காலை பத்து மணியளவில் அறையில் நின்று கொண்டிருந்த போது, தேவனுடைய ஆவிக்குள்ளானேன். அப்பொழுது ஒரு சிறு கூட்டம் புறாக்கள் பறந்து செல்வதைக் கண்டேன். அந்த சிறு பறவைகளை நான் உற்று நோக்கினேன். உங்களுக்கு அது ஞாபகமிருக்கும். நான் கூர்நுனிக் கோபுரவடிவில் ஏழு தூதர்கள் என்னிடம்

வேகமாக வருவதைக் கண்டேன். அவர்கள், "மேற்கே டூசானுக்கு செல், அதன் வட கிழக்கில் நாற்பது மைல் தொலைவில் இரு. நீ ஊமுள்ளை உன் துணிகளிலிருந்து எடுப்பாய்" என்றனர்.

60. அங்கு உட்கார்ந்து கொண்டு என்னையே நோக்கிக் கொண்டிருக்கும் சகோ. ஃபிரட் சாத்மன் அன்று காலை என்னுடன் இருந்தார். எனக்கு எல்லாம் மறந்து விட்டது.

நான், "ஒரு வெடி வெடித்து, பூமியதிர்ச்சியைப் போல் தேசத்திலுள்ள எல்லாவற்றையுமே அசைத்தது, அதன் பிறகும் ஒரு மனிதன் எப்படி உயிர்வாழ முடியும் என்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினேன். நான் பயந்து போனேன். நான் பீனிக் ஸில் நின்று கொண்டிருந்தேன். இன்றிரவு என்னைக் கேட்டுக் கொண்டிருப்பவர் அனைவரும் அதற்கு சாட்சிகள், நான், "ஐயன்மீர் இதுவா சமயம்?" "நாம் எங்குள்ளோம்?" என்பதைக் குறித்து பிரசங்கித்தேன். நான் மேற்கே சென்றேன். உங்கள் அநேகரிடம் அந்த ஒலிநாடா இருக்கும். அது நிகழ்வதற்கு ஒரு

ஆண்டுக்கு முன்பே அது கூறப்பட்டதை நீங்கள் கேட்டீர்கள்.

61. என்ன நடக்கப் போகின்றது என்று வியந்து கொண்டே நான் மேற்கே சென்றேன். ஒரு நாள் கர்த்தரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. நான் என் மனைவியிடம், "தேனே, ஒருக்கால் என் வேலை முடிந்து விட்டிருக்கும்" என்றேன். எனக்கு நிச்சயமாக தெரியவில்லை. நான், "என் பணியை தேவன் முடித்து விட்டார் என்று நினைக்கிறேன். நான் பரம வீடு செல்கிறேன். நீ பில்லியையும், மற்ற பிள்ளைகளையும் கூட்டிக்கொள். தேவன் எப்படியாவது உனக்கு ஒரு வழியை உண்டு பண்ணுவார். நீ தேவனுக்கு உண்மையாக வாழு. பிள்ளைகள் பள்ளியில் படிக்கின்றார்களா என்று கவனித்துக்கொள், தேவனுடைய போதனைகளில் அவர்களை வளர்த்து வா" என்றேன்.

அவள், "பில்லி, அது உண்மையாவென்று உங்களுக்குத் தெரியாதல்லவா?" என்றாள்.

நான், "ஆம் ஆனால் அந்த வெடிக்குப் பிறகு ஒருவனும் உயிர் வாழ முடியாது" என்றேன்.

ஒரு நாள் காலை கர்த்தர் என்னை எழுப்பி, “நீ சபினோ மலைக்கணவாய்க்கு (Sabino Canyon) சென்று, அதன் மேலேறு" என்றார். நான் ஒரு காகிதத் துண்டையும் வேதாகமத்தையும் எடுத்துக் கொண்டேன். மனைவி, "எங்கு போகின்றீர்கள்?" என்று கேட்டாள்.

நான், "எனக்குத் தெரியாது. நான் திரும்பி வந்த பிறகு கூறுகிறேன்" என்றேன்.

62. நான் மலைக்கணவாய்க்கு சென்று, கழுகுகள் பறந்து கொண்டிருக்கும் இடத்திற்கு ஏறிச் சென்றேன். அங்கு நின்று கொண்டிருந்த ஒரு மானை நான் கவனித்துக் கொண்டிருந்தேன். நான் ஜெபம் பண்ண முழங்கால்படியிட்டு, என் கைகளையுயர்த்தினேன். அப்பொழுது ஒரு பட்டயம் என் கையில் விழுந்தது. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். நான், "இது என்ன?

எனக்கு புத்தி மாறாட்டம் ஒன்றும் ஏற்படவில்லை. என் கையில் பளபளப்பான பட்டயம் இதோ உள்ளதே" என்று நினைத்தேன். "இந்த மலைக்கணவாயிலிருந்து அநேக மைல்கள் தூரம் வரைக்கும் ஜனங்கள் யாருமில்லையே. அது எங்கிருந்து வந்திருக்கும்?" என்று எண்ணினேன்.

அப்பொழுது, "அது ராஜாவின் பட்டயம்" என்று கூறும் ஒரு சத்தத்தைக் கேட்டேன்.

நான், "ராஜா பட்டயத்தைச் கொண்டு தான் ஒரு மனிதனுக்கு பட்டம் சூட்டுகின்றான்" என்றேன்

அந்த சத்தம் மறுபடியும், "அது ஒரு ராஜாவின் பட்டயம் அல்ல, அது ராஜாவின் பட்டயம் (The King's Sword), தேவனுடைய வார்த்தை" என்றது. அது மேலும், "பயப்படாதே. அது மூன்றாம் இழுப்பு. அது உன் ஊழியத்தை உறுதிப்படுத்தும் ஒன்றாகும்" என்றது.

63. என்ன நடக்கப்போகிறதென்று அறியாதவனாய், நான் என் நண்பனுடன்

வேட்டைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒருவர் என்னை தொலைபேசியில் கூப்பிட்டார். அவர்தான் கர்த்தருடைய தூதன் உள்ள அந்த புகைப்படத்தைக் குறித்து குற்றம் கண்டு பிடித்தவர், அதை எடுத்தவர் அவரே அவருடைய மகனின் விஷயமாக நான் ஹவுஸ்டனுக்குப் போக வேண்டியிருந்தது. அவன் மரண வரிசையில் சென்று கொண்டிருந்து இன்னும் சில நாட்களில் கொல்லப்பட வேண்டியவனாயிருந்தான். இந்த மனிதன் என்னை அங்கு சந்தித்து அவருடைய கைகளை என் மேல் போட்டு, "நான் குற்றம் கண்டு பிடித்த அதே மனிதன் என்னுடைய ஒரே மகனைக் காப்பாற்ற வந்திருக்கிறார் என்பதை எண்ணிப்பாருங்கள்" என்றார். இரக்கம் காண்பிக்கும் சங்கம் (The humane Society) ஒரு உயிரை காப்பாற்றியதற்காக எனக்கு ஆஸ்கர் விருதை வழங்கினர்.

64. நான் திரும்பிச் சென்று, வேட்டைக்காக மலையின் மேல் சென்றேன். அங்கு சகோ. ஃபிரட்டும் நானும் ஒரு காலை நடந்து கொண்டிருந்த போது, ஏற்கனவே என்

காட்டுப்பன்றி எனக்கு கிடைத்து விட்டது. அது எங்கு சென்றது என்று நான் பார்த்து விட்டேன். நான், "சகோ. ஃபிரட், அதிகாலையில் அந்த மலையின் மேல் செல்லுங்கள். நான் மற்ற மலையின் மேல் செல்கிறேன். நான் அந்த காட்டுப்பன்றியை நோக்கி சுட்டு அதைக் கொல்ல மாட் டேன். அந்த பன்றிக் கூட்டம் அந்த வழியாக வருமானால், அவைகளுக்கு முன்னால் சுட்டு, அவைகளை திருப்பி விரட்டியடித்து விடுகிறேன்" என்றேன்.

65. சகோ. ஃபிரட் அங்கு சென்றார், அங்கு காட்டுப் பன்றிகள் இல்லை. அவர் கையாட்டி சைகை காண்பித்ததை நான் கண்டேன். நான் மலைக்கணவாயில் இறங்கினேன். அவை ஆழமான பிளவுகள். அப்பொழுது தான் சூரியன் மேலே வந்து கொண்டிருந்தது. நான் சுற்றி மலையின் மறுபவத்தை அடைந்தேன், நான் தீகக்கதரிசனத்தைக் குறித்து ஒன்றுமே நினைக்கவில்லை. அங்கு நான் உட்கார்ந்து கொண்டு இளைப்பாறினேன். "அந்த

பன்றிகளுக்கு என்ன நேர்ந்தது?" என்று நினைத்தேன்.

நான் பொறுக்கினேன்... இந்தியர்கள் உட்காருவது போல் நான் கால்களை மடக்கி உட்கார்ந்து கொண்டு, என் மேல் ஆடையின் (Overall) கால் பாகத்தை நோக்கின போது ஊமுள் அங்கிருந்தது. அதை நான் எடுத்தேன். நான், “இது வினோதமாயுள்ளதே! இதோ நான் டூசானுக்கு நாற்பது மைல் வடகிழக்கே இருக்கிறேன். என் சிறு பையன் ஜோசப் அங்கு உட்கார்ந்து கொண்டு எனக்காக காத்துக் கொண்டிருக்கிறான்" என்றேன். நான் நோக்கின போது, ஒரு கூட்டம் காட்டுப் பன்றிகள், மலையின் மேல், நான் இருந்த இடத்திலிருந்து ஆயிரம் கெஜம் தூரத்தில் வருவதைக் கண்டேன். நான் ஊமுள்ளை கீழே போட்டேன். நான், "அவைகளைப் பெறுவனே, நான் சகோ. ஃபிரட்டை கூப்பிடுவேன். இந்த வழியாக எப்படி வருவது என்று ஒரு காகிதத் துண்டை தொங்கவிட்டு காண்பிப்பேன். சகோ. ஃபிரட்டை இங்கு வர வழைப்பேன்" என்றேன்.

நான் மலையின் மறுபக்கத்தில், என்னால் இயன்றவரை வேகமாக ஓடத் தொடங்கின போது, திடீரென்று யாரோ என்னை சுட்டுவிட்டார்கள் என்று நினைத்தேன். அப்படிப்பட்ட ஒரு வெடி சத்தத்தை நான் கேட்டதேயில்லை. அது தேசம் முழுவதையும் அசைத்தது. அப்படி நேர்ந்த போது, எனக்கு முன்பாக ஏழு தூதர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர்.

66. நான் சகோ. ஃபிரட்டையும், மற்றவர்களையும் சற்று கழித்து சந்தித்தேன். அவர், "அது என்ன?" என்று கேட்டார்.

நான், "அது தான் அது" என்றேன்.

"நீர் என்ன செய்ய போகின்றீர்?"

"வீடு திரும்புவேன். ஏனெனில், கர்த்தர் உரைக்கிறதாவது வேதாகமத்தில் இத்தனை ஆண்டுகளாக ஸ்தாபனங்களுக்கும், மற்றவர்களுக்கும் மறைக்கப்பட்டிருந்த ஏழு பரம ரகசியங்களை தேவன் ஏழு

முத்திரைகளைத் திறந்து வெளிப்படுத்தித் தரப் போகின்றார்" என்றேன்.

அந்த வட்டம் ஒரு மூடு பனியைப் போல் உயர எழும்பினது. அது அப்படி செய்த போது, அது மலைக்குச் சென்று அது வந்த வழியாகவே மேற்கு திசையில் வட்டமிடத் தொடங்கினது. சிறிது கழிந்து, விஞ்ஞானம் அதை முப்பது மைல் உயரத்தில், இருபத்தைந்து மைல் விட்டம் அளவில் கூர் நுனிக்கோபுர வடிவில் வட்டமிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டது.

67. அன்றொரு நாள் அங்கு நின்று கொண்டு, அந்த படத்தை வலது பக்கம் திருப்பின் போது, ஏழு சபையின் காலங்களில் இயேசு காணப்பட்டவிதமாக அது இருந்தது. தலையில் வெள்ளை தலை அங்கியை (wig) அணிந்து, சகல அதிகாரமும் கொண்ட தேவனாக. அவர் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். அவரே எல்லா நித்தியத்துக்கும் பிரதானமான நீதிபதியாயிருந்து, அங்கு நின்று கொண்டு, இந்த மணீ நேரத்துக்கான செய்தியை

உறுதிப்படுத்தினார். சாயங்காலத்தில் வெளிச்சமுண்டாகும்! இதெல்லாம் என்ன? இது என்ன?

68. நான் மேற்கே சென்றேன். அதே மலையின் மேல் பாங்க்ஸ் உட்டுடன் கடந்து சென்று கொண்டிருந்த போது, "ஒரு கல்லை மேலே எறி. திரு. உட்டிடம், **கர்த்தர் உரைக்கிறதாவது,** நீங்கள் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள், என்று கூறு" என்றார்.

அடுத்த நாள் அங்கு நின்று கொண்டிருந்த போது, ஒரு சுழல் காற்று கீழே இறங்கி வந்து, மலைகளைப் பெயர்த்தது. கற்கள் பறந்து சென்று, என் தலைக்கு மேல் மூன்று அல்லது நான்கு அடி உயரத்தில் மரங்களின் மேல் பாகத்தை வெட்டினது. மூன்று பெரிய வெடிப்புகளை அது உண்டாக்கினது. சகோதரர் ஓடி வந்தனர். அங்கு ஏறக்குறைய பதினைந்து பேர்கள் - போதகர்களும், மற்றவர்களும் நின்று கொண்டிருந்தனர். அவர், "அது என்ன?" என்று கேட்டார். "அது என்ன?"

நான், "நியாயத்தீர்ப்பு மேற்கு கரையைத் தாக்குகின்றது" என்றேன்.

69. அதற்கு இரண்டு நாட்கள் கழித்து, பூமியதிர்ச்சி அலாஸ்காவை திட்டத்தட்ட மூழ்கடித்தது. அரிசோனாவிலுள்ள கோரனோடாகாட்டில், சூரியன் அஸ்தமன மலையின் மேல் (Sunset Mountain) காணப்பட்ட வெளிச்சம் என்ன? அங்கு நடந்த இந்த வினோதமான சம்பவம் என்ன? அதன் விளைவாக, ஜனங்கள் மேற்கிலிருந்து கிழக்குக்கு காரோட்டி சென்று, அது தாக்கின அந்த இடத்தைச் சுற்றிலும் இருந்த கற்களைப் பொறுக்கினார்கள்; வெடியின் காரணமாக பெயர்ந்து வந்த அந்த கற்கள் ஒவ்வொன்றும் மூன்று முனைகளைக் கொண்டதாயிருந்தன (மூவரும் ஒன்றாயிருக்கின்றனர்.) அவை தேசமெங்கிலும், காகிதம் பறக்காதபடிக்கு உபயோகிக்கப்படும் பொருட்களாக (Paper weights) மேசைகளை அலங்கரிக்கின்றன. கோரனோடோ காட்டிலுள்ள சூரிய அஸ்தமன மலையின் மேல் நடந்த இந்த வினோதமான காட்சி என்ன?

70. ஜுனியர் ஜாக்ஸன் இதை கேட்டுக் கொண்டிருப்பார். "சூரியன் அஸ்தமிக்கும் திசையை நோக்கிச் செல்வதாக" அவர் கண்ட சொப்பனம் ஞாபகமுள்ளதா? அதற்கு நான் அர்த்தம் உரைத்தேனே! இது, "சூரிய அஸ்தமன" மலையில் நிகழ்ந்தது! இது சாயங்கால நேரம், சூரியன் அஸ்தமிக்கும் நேரம். சூரிய அஸ்தமன செய்தியின் மூலம் சரித்திரம் அஸ்தமனமாகி, தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. கோரனோடா காட்டிலுள்ள சூரிய அஸ்தமன மலையின் மேல் சாயங்காலத்தில் வெளிச்சமுண்டாகும். அது டூசானுக்கு நாற்பது மைல் வடக்கில் உள்ளது. வரை படத்தை வாங்கி சூரிய அஸ்தமன சிகரம் (Sunset Peak) எங்குள்ளது என்று பாருங்கள். அந்த இடத்தில் தான் அது சம்பவித்தது. அன்றொரு நாள் வரைக்கும் அதை நான் அறிந்திருக்கவில்லை.

71. மரணத்தைக் காண முடியாத எல்லாமே தொடர்ச்சியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டு வருகிறது. அது நடக்கத் தொடங்கின முதற்கொண்டு, இயேசு நம்மை

பார்த்துக் கொண்டு நின்று கொண்டுள்ள புகைப்படம் வரைக்கும்; இப்பொழுது சரியாக சூரிய அஸ்தமன மலையின் மேல் சூரிய அஸ்தமன வெளிச்சம். சாயங்கால வெளிச்சம் வந்து விட்டது. தேவன் தம்மை உறுதிபடுத்துகின்றார். அது என்ன? தேவனும் கிறிஸ்துவும் ஒருவரே என்னும் உண்மையாகும். அந்த வெள்ளை. "எத்தனை பேர், நாம் வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரத்தில் பேசினவிதமாக அவருடைய தலையின் மேல் இருந்த தலை அங்கியைக் கண்டீர்கள்?" பாருங்கள், சகல அதிகாரத்தையுமுடைய பிரதான தேவன்! வேறே சத்தமில்லை, வேறே தேவன் இல்லை, வேறு ஒன்றுமில்லை. "தேவத்துவம் நம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது." தூதர்களே அவருடைய தலை அங்கி, ஆமென்.

72. சூரிய அஸ்தமன மலையில் நிகழ்த்தது? என்ன தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். இந்த சந்தடி எல்லாம் அதைக் குறித்துதான். கவனியுங்கள், அது வெளிப்படுத்தல்.10:1-7 முடிய

வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையை தேவன் நிறைவேற்றுதலாம். "ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிற போது தேவரக சியம் நிறைவேறும்." வெளிப்படுத்தல்.10:1-7 உரைக்கும் மறைக்கப்பட்ட இரகசியம், கடைசி சபை காலத்துக்கு அளிக்கப்படும் கடைசி செய்தி, இந்த காலத்தில் அப்படியே நிறைவேறுகின்றது. பரி. லூக்கா;17:30, "மனுஷகுமாரன்வெளிப்படும் நாளில்."

"கள்ளக் கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள்" (மத்;24:24). ஜனங்கள் இன்னும் சந்தேகத்தில் இருக்கின்றனர். சபையும், வழக்கம் போல், குழப்பமுற்றுள்ளது.

73. டூசான் முழுவதிலும் விஞ்ஞானம்; அவர்கள் இதைக் குறித்து கட்டுரைகள் எழுதி செய்தித் தாள்களில் வெளியிடுகின்றனர்.

லெம்மன் மலையின் மேல்; அந்த பெரிய புகைப்படம் எடுக்கும் கருவிகள், நாங்கள் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து அது மேலே எழும்பிச் சென்றதை காணவில்லை. அது மேற்கு நோக்கி மிதந்து சென்று, காலம் முடிந்து விட்டது என்பதைக் காண்பித்தது. அது வேறெங்கிலும் சிறிதளவும் கூட செல்ல முடியாது. அது மேற்கு கரைக்கு சென்றது. அது போன வழியில் எல்லாம் நியாயத்தீர்ப்பு தாக்கினது. அது பீனிக்ஸின் மேல் சென்று, பின்பு அதைக் கடந்து பிரஸ்பாட், மலைகளைக் கடந்து மேற்கு கடற்கரைக்குச் சென்று... அவர்கள் எங்கே சென்றனர்? அலாஸ் காவுக்குள். அவள் இப்பொழுது இடி முழக்கமிட்டு, அந்த வழியாக சென்று கொண்டிருக்கிறாள்.

74. டூசானிலுள்ள வான்நிலை ஆராய்ச்சி நிலையங்கள் அனைத்தும் அது என்னவென கேட்டுக் கொண்டிருக்கின்றன, விஞ்ஞான ஆய்வுகள் அது என்னவென்பதை கண்டுபிடிக்க முயன்று கொண்டிருக்கின்றன. மூடு பனியோ, பனியோ உண்டாக முடியாத

அவ்வளவு உயரத்தில் அது காணப்பட்டது. "அதை செய்தது எது?" "அது எங்குள்ளது?" இயற்கைக்கு மேம்பட்ட இந்த ஒளி வட்டம் புதிராயுள்ளது - சாஸ்திரிகள் ஒரு நட்சத்திரத்தைப் பின் தொடர்ந்து வந்து, "யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்று கேட்ட போது, அது அவர்களுக்கு புதிராக இருந்தது போல. அது என்ன? "ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்" (7.24:17) என்னும் வாக்குத்தத்தத்தை தேவன் நிறைவேற்றினதாகும்.

75. சாயங்கால நேரத்தில் சாயங்கால வெளிச்சம் உண்டாகும் என்று பரலோகத்தின் தேவன் வாக்களித்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இந்த பரமரகசியம் "ஐயா, இது என்ன சமயம்?" என்னும் தீர்க்கதரிசனமாக இருந்தது. இப்பொழுது அது சரித்திரமாகி விட்டது. வாக்குத்தத்தம் நிறைவேறி விட்டது. ஐயா, இது என்ன சமயம், இது என்ன கவர்ச்சி? தேவன் தமது

வார்த்தையை நிறைவேற்றுதல். அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார்.

ஜெபம் செய்வோம்:



# கூடார தரிசனம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# கூடார தரிசனம்
# (Tent Vision)

---

**இது 1955-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கர்த்தருடைய தூதன் தோன்றி சகோதரர் பிரன்ஹாம் அவர்களுக்கு அருளிய தரிசனம்**

என் ஊழியத்தின் ஆரம்பத்தில் கர்த்தருடைய தூதன் எவ்விதம் ஒளியாகத் தோற்றமளித்து என்னுடன் பேசி எவ்விதம் நான் தரிசனத்தின்படி ஊழியம் செய்ய வேண்டும் என்று கூறியதை நான் கூறக் கேட்ட, நானிருந்த என் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு ஊழிய சாகோதரன் அது பிசாசினால் உண்டானது என்றும் என் சபையும் நான் பின்பற்றும் உபதேசமும் தவறென்றும், தரிசனம் காணுதல் மற்றும் அற்புதங்களைச் செய்தலின் நாட்கள் முடிந்து விட்டது என்றும் கூறினார்.

ஒவ்வொரு யுகத்திலும் தாம் செய்து வந்தது போலவே இன்றும் தேவன்

வேதாகமத்தில் தூதர்கள், தீர்க்கதரிசிகள், அதிசயங்கள், அற்புதங்கள், அடையா ளங்கள் மூலம் தம் ஜனங்களைச் சந்திப்ப தாக சபைக்கு வாக்களித்திருப்பதை அவர் கள் அறியாதிருந்தனர். அங்கே, சபை சரித்திரத்தில் ஏழு யுகங்கள் உண்டு. நாம் கடைசி யுகத்தில், ஆயிரம் வருட அரசாட் சிக்கு சற்று முன்புள்ள யுகத்தில் இருக்கிறோம்.

கர்த்தர் கூறினவிதமாகவே செய்ய நான் தீர்மானித்து அவருடைய வழிநடத்துதலின் படியே ஊழியத்தைத் துவங்கினேன். மூன்று ஆபத்துக்களைக் குறித்து ஒரு ஊழியக்காரன் கவனிக்க வேண்டும் என்று நான் உணர்ந்தேன். புகழ், பெண், பணம் போன்றவைகளை. முதல் இரண்டைக் குறித்து எனக்கு பயமிருக்கவில்லை. ஆனால் பணத்தைக்குறித்த காரியத்தில் பயமிருந்தது. ஆகவே பணத்தைக் குறித்த காரியத்தில் எனக்கு ஒரு நெருக்கமுண் டாகும் நேரம் வருமானால் நான் ஊழியக்

களத்தை விட்டு விலகி விடுவேன் என்று 1946ல் தேவனிடம் வாக்குப் பண்ணியிருந் தேன். கூட்டங்களின் தேவைகள் சந்திக்கப் படும்வரை ஊழியம் செய்வேன் என்றும், தேவைகளில் குறைவு ஏற்படுமேயானால் ஊழியத்தை விட்டு வீட்டிற்குச் சென்று விடுவேன் என்றும் வாக்களித்திருந்தேன்.

ஒன்பதாண்டுகள் வரை நான் பணத்திற்காக முயற்சிகள் மேற்கொள்ள அவசியமில்லாத வகையில் கர்த்தர் எல்லாத் தேவைகளையும் சந்தித்து வந்தார். ஆனால் 1955-60 என்னுடைய மூன்று தொடர்ச்சியான மிகப்பெரிய கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் செலவுகளின் தேவை யில் குறைவு ஏற்பட்டது; எனவே சகோ தரர்கள் அதிகமான குறைவுகளை சரிக்கட்ட முயற்சி மேற்கொண்டனர். இந்தக் கூட்டங் களின் முடிவு நாட்களில் என்னுடைய மனைவி, மகன் மற்றும் சிறிய மகளும் நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். அது அதிகாலை 2+ மணி

வேளையாயிருந்தது. அவர்களை உறங்கச் செல்லுமாறு கூறிவிட்டு நான் மலைப் பகுதிக்குச் சென்று முழங்கால் படியிட்டு தேவனை நோக்கிக் கதறினேன். நான் ஊழியக்களத்தை விட்டுவிட வேண்டும். தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களின் தேவைகள் சந்திக்கப்படவில்லை என்று மற்றவர்களால் குறைக்கூறி எழுதப் பட்டது. அது நான் தேவனிடத்தில் வாக்குப்பண்ணினது போல் இருக்க வில்லை. நான் வாக்குப்பண்ணினது என்னவென்றால் கூட்டங்கில் தேவை சந்திக்கப்படாவிட்டால் நான் ஊழியக் களத்தை விட்டு சென்று விடுவேன் என்பதே. நான் என் வாக்கை நிறைவேற்ற வேண்டிதாயிருந்தது. நான் என் அறைக்குத் திரும்பி வந்த போது நான் அழுது கொண்டிருந்ததைக் கண்ட என் மனைவி பில்லி உமக்குள்ள காரியம் என்ன? என்றாள். தெய்வீக சுகமளிக்கும் கூட்ட ஊழியங்களை விட்டு விடப்போகிறேன்

என்பதை அவளிடம் கூற இயலாத வனாயிருந்தேன். எனவே "ஓ, அது அவ்வளவுதான்" என்று கூறினேன். நாங்கள் கலிபோர்னியாவிலிருந்து கிழக்கு நோக்கி அரிசோனா, டெக்சாஸ், மற்றும் தேசத்தின் பல பகுதிகளையும் கடந்து இறுதியாக ஜெஃபர்ஷன்வில், இந்தியானா வுக்கருகில் வந்தபோது இதைப்பற்றிக் கூறினேன்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்காவிட்டால் எனக்கு ஐயோ என்று வேதத்தில் பவுலி னால் கூறப்பட்டுள்ளதே, எனவே நீர் அவ்வவாறிருக்க முடியாது என்று பில்லி பால் கூறினான். நான் அவனிடம் மகனே நான் சுவிசேஷ ஊழியத்தை விட்டு விடுவதாக ஒரு போதும் கூறவில்லை. கர்த்தர் என்னை ஜீவனோடு வைக்கும் வரை இந்த ஊழியத்தைச் செய்யவே விரும்புகிறேன். தெய்வீக சுகமளிக்கும் கூட்ட ஊழியங்களை விட்டு விடுவதைக் குறித்தே கூறினேன் என்றேன்.

"பணக்குறைவினிமித்தம் கடல் கடந்தும் மற்ற இடங்களிலும் நடைபெறவுள்ள பெரிய கூட்டங்களை விட்டு விடப் போகிறீர்களா? தேவன் அவைகளை விட்டு விடும்படி கூறவில்லை. அது உமது சொந்தத் தீர்மானம்" என்று பில்லிபால் கூறினான். நானோ ஒரு நேர்மையான மனிதன் தன் வார்த்தையைக் காத்துக் கொள்வான். நான் தேவனிடத்தில் ஒரு வாக்குப் பண்ணியிருக்கிறேன். அதை நான் காத்துக்கொள்ள வேண்டும் என்றேன்.

அடுத்த நாள் காலை என் மனைவியும் நானும் நேரத்தோட எழுந்தோம். நான் என் தலையைக் கைகளால் தாங்கியவாறு கட்டிலின்மேல் உட்கார்ந்திருந்தேன். நான் என் மனைவியிடம், "நல்லது, தேனே நான் இன்று ஜெஸ் மிட்செலைக் கண்டு அவருடைய இன்டியானா லைட் அன்ட் பவர் கம்பெனியில் தொலைக்கம்பிகளைச் சுற்றி நடந்து பழுதுபார்க்கும் என் பழைய வேலையைத் திரும்ப அளிக்கும்படி

கேட்கப் போகிறேன்" என்றேன். உடனடியாக நான் அறைக்கு வெளியே நோக்கினேன். அப்பொழுது இரண்டு பழைய மரக்கட்டைகளால் ஆன சக்கரங்களை உடைய சிறிய கட்டைவண்டியைத் தள்ளிக்கொண்டு இரண்டு சிறு பிள்ளைகள் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். அவர்கள் மெக்சிகோவைச் சேர்ந்த ஏறக்குறைய நிர்வாண நிலையிலும் கறுப்புநிற சரீரமும் கறுப்புமயிரும் கறுப்புக் கண்களும் உடையவர்கள்போல் காணப்பட்டனர். என் மனைவி அறையில் நடமாடுவதை நான் கேட்க முடிந்தது; நான் அவளிடம், "தேனே, ஏழைச் சிறு பிள்ளைகள் என்று நான் கூறினேனே, அவர்களை பார்க்கவில்லையா?" என்று கேட்டேன். நான் தரிசனத்தின் ஆழமான பரிமாணத்தில் சென்றபோது நான் என் மனைவியை விட்டு சற்றப்பால் சென்று, குள்ளமான சகோதரன் ஆர்கன் பிரைட்டை சந்தித்தேன். அவர் "சகோதன் பிரன்ஹாமே, ஜெப

அட்டைகளெல்லாம் கொடுக்கப்பட்டு விட்டது. கூட்டத்துக்கு உங்களை அழைத்து வர எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டது" என்றார். சகோதரர் ஆர்கன் பிரைட்டுடன் யாரோ ஒருவர் இருந்தார். நான் அவர்களைக் கடந்து சென்றபோது நான் கண்ட சிறுபிள்ளைகளைப்போல் கறுப்பு நிறத்தவர்களாயிருந்த பெரிய கூட்டமாயிருந்த ஜனங்கள் நிரம்பியிருந்த வெளிப்புறத்திற்கு வந்தேன். அவர்களிடம் என் ஸ்தானத்தில் பேசிக் கொண்டிருந்தவர் வேறு ஒரு நபராயிருந்தார். என் அருகில் நின்ற ஒரு மனிதனிடம் பேசிக்கொண் டிருக்கும் மனிதன் யார் என்று கேட்டேன். அவர் என்னிடம் அவர்கள் அந்த மனிதரை அங்கு பேசவைத்துள்ளனர்" என்றார். நான் அவர்கள் யார்" என்றேன். அப்பொழுது ஒரு மனிதன் என் ஸ்தானத்தில் பேசிக் கொண்டிருந்தவர் கூட்டத்தை முடித்து விட்டார். அனைவரும் கலைந்து செல்லத் தொடங்கினர். நான், "ஓ, அது சரியல்ல,

பீட அழைப்பு எங்கே?" என்று கூச்சலிட்டேன். ஒரு மனிதன் வந்து, நாங்கள் காணிக்கை எடுத்து விட்டோம். கூட்டத்தை முடித்துவிட்டோம் சகோதரன் பிரன்ஹாம்" என்றனர். நான், "எப்பொழுதிலிருந்து காணிக்கையானது பீட அழைப்பைக் காட்டிலும் மிக முக்கியமானதாக ஆனது? " என்று கேட்டேன்.

ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்காக அங்கே ஆதாயப்படுத்தப் பட்டிருக்கக் கூடும். ஆனால் அம்மனிதர் அவர்களைக் கலைந்துபோகச் செய்து விட்டார். மழைபெய்ய ஆரம்பித்து விட்டது. அந்த ஆத்துமாக்களெல்லாம் கலைந்து சென்று விட்டனர். ஒருவேளை அவர்கள் திரும்பவும் வராமற்போகலாம் என்றேன். அந்த மனிதன் என்னிடம், நீங்கள் அவர்களுடன் இன்று பிற்பகலில் பேசப்போகிறீர்கள்" என்றார். நான், "எந்த நேரத்தில் அவர்களுடன் பேசுவதாக அந்த மனிதர் அறிவிப்பு செய்தார்?" என்று

கேட்டேன். அவர் "எந்த நேரத்திலும்" என்றார். "எந்த நேரத்திலுமா? அங்கு பன்னிரண்டுபேர் கூட அந்நேரத்தில் இருக்க மாட்டார்களே?" என்று கூக் குரலிட்டேன். அப்பொழுது எனக்கு வலது பக்கமாய்ப் பின்னாக இருந்து அன்பாக மெல்லிய சத்தமாய் ஆனால் உறுதியாக, "நம்முடைய கர்த்தர் சத்தியத்தை அவர்க ளுக்குச் சொன்னபோது ஆயிரக்கணக்கான வர்கள் அவரைவிட்டு விலகிய போது, பன்னிருவருடன் தனித்துவிடப்பட வில்லையா?" என்று வினவியது.

ஒரு கரம் என் வலதுபக்கத்திலிருந்து எனக்கு முன்பாக அசைவாடியது. அப்பொ ழுது நான் (தரிசனத்தில்) இன்னும் ஓர் மேலான பரிமாணத்திற்குள் செல்வது போல் தோன்றினது. என் மனைவி மேடா அறையினுள் நடப்பதை அதற்கு மேல் என்னால் கேட்க முடியவில்லை. நான் ஒரு அழகான ஏரிக்கருகில் நின்றிருந்தேன்;

அதைப்போன்ற தெளிவான நீரை நான் ஒரு போதும் என் வாழ்வில் கண்டதில்லை.

முதலாவதாக நான் ஒன்பதாண்டு களுக்கு முன்பு ஊழியத்திற்குச் சென்ற போது நான் ஒரு தரிசனம் கண்டேன். அதில் நான் மீன் பிடித்துக்கொண்டிருந் தேன். அந்த மீன் பெரிய வெண்மையும் கருமையுமான புள்ளிகளை உடையதா யிருந்தது. அவைகள் சரியாகக் காணப்பட வில்லை. ஆனால் இந்தத் தரிசனத்தில் ஏரி மிகப்பெரியதாயிருந்தது. அதிலே தெளி வான தண்ணீரும் மிகப்பெரிய அழகான ரெயின்போ ட்ரவுட் மீன்களும் இருந்தது. அதைச்சுற்றிலும் நூற்றுக்கணக்கான தேவ ஊழியக்காரர்கள் மீன்பிடித்துக் கொண் டிருந்தனர். நான் என் உள்ளத்தில், "நான் அவர்களைப் போன்றே நன்றாக மீன் பிடிப்பவன் அல்லது அவர்களைவிட நன்றாக மீன் பிடிப்பவன்'' என்று கூறினேன். நான் மிகப்பெரிய அழகான மீனைப் பிடிக்கவேண்டும் என்றிருந்தேன்.

அதற்காக என் தூண்டிலையும் இரையையும் தயார்செய்ய ஆயத்தமானேன்.

அதன் பிறகு எனக்குப் பின்புறம் வலது பக்கமாக என் சிறுவயது முதல் என்னோடு பேசிக் கொண்டிருக்கும் கர்த்தருடைய தூதனின் சத்தம் "எப்படி மீன் பிடிப்பது என்று உனக்கு நான் கற்பிப்பேன். ஆனால் அதைக்குறித்து கண்டிப்பாய் யாரிடமும் எதுவும் கூறாமல் நீ அமைதலாயிருக்க வேண்டும்"

என்றது. நான் அமைதலாயிருப்பேன் என்று பதிலுரைத்தேன். அவர் உன் இரையைத் தூண்டிலின் முனையில் வை என்றார். நான் அவ்வாறு செய்தேன். அப்பொழுது அவர் "இப்பொழுது அந்தப் பெரிய மீனைப்பிடிக்க நீ தூண்டிலை ஆழமான தண்ணீரில் போடவேண்டும்" என்றார். நான் தூண்டிலை என் முழுப் பெலத்தோடு வீசினேன். தூண்டில் கயிறு அதன் முழு நீளத்தோடு தண்ணீரில் விழுந்தது. அவர் அது நன்றாகச் செய்யப்

பட்டது என்றார். தூண்டில் கயிறு தண்ணீ ரின் ஆழத்தில் சென்றபோது அவர் "இப்பொழுது, முதலில் மெதுவாய் இழுத்து மீன்களை வசப்படுத்து. அதன் பிறகு தூண்டில் முள்ளை வேகமாய் தண்ணீரிலிருந்து இழு; அவர்கள் சிறிய மீன்களைப் பிடித்துக் கொண்டிருக்கும் போது உனக்குப் பெரிய மீன் அகப்படும், அமைதலாயிருக்கக் கவனமாயிருந்து இதைக் குறித்து யாரிடமும் ஒன்றும் கூறாதே. மூன்றாம் இழுப்புக்காக உன் தூண்டிலை கெட்டியாய்ப் பிடித்துக்கொள். அப்பொழுது நீ உன் மீன் பிடிப்புக்கு ஆயத்தமாயிருப்பாய்" என்றார். "நான் அறிந்து கொண்டேன்" என்றேன். எல்லா ஊழியக்காரர்களும் எல்லா இடங்களிலு மிருந்து வந்து "சகோதரன் பிரன்ஹாம், நீங்கள் மீனைப்பிடிக்க முடியும் என்று அறிவோம்" என்றனர். நான்,-ஓ, ஆம், அதை எப்படிச் செய்வது என்று எனக்குத் தெரியும்" என்றேன். அப்பொழுது கர்த்த

ருடைய தூதன் எனக்குச் சொன்ன வண்ணமாகவே அதை அவர்களுக்கு விவரித்தேன். ஊழியக்காரர்களுக்கு மீன் பிடிப்பது எப்படி என்று விவரித்துக் காண்பித்தபோது நான் பரவசமடைந்தேன். எனவே என் தூண்டிலை தண்ணீரிலிருந்து மேலே இழுத்து தூண்டில் முனையளவுள்ள ஒரு மீனைப் பிடித்தேன். தூண்டிலின் முனையில் மீனின் தோல் நன்கு சுற்றிக் கொண்டதுபோல் தோன்றினது. ஓ, நான் எவ்விதமாய் எப்பொழுதுமே இல்லாத விதமாய் அதைப் பிடித்தேன் என்று வியந்தேன்.

கர்த்தருடைய தூதன் என் வலது பக்கமாய் பின்புறத்திலிருந்து நடந்து எனக்கு முன்பக்கமாய் எனக்கு நேராக வந்தார். நான் எப்பொழுதும் கண்டிருக்கிற அதே ஒருவர் - ஒரு உயரமான மனிதர், பலம்பொருந்திய, 200 பவுண்டு அளவுள்ள மனிதர், பெரிய கைகள், வெண்ணிற அங்கி தரித்தவராய்,

வெறுங்கால்களுடன் கருத்த தலைமயிர் உடையவராய் அவர் காணப்பட்டார். அவர் என் முகத்தை நேராக உற்றுப்பார்த்து "நான் உன்னை எதைச்செய்யக் கூடாதென்று கூறினேனோ அதையே நீ செய்தாய்" என்றார். "இப்பொழுது இதுவே என் முடிவு!" என்று நான் எண்ணினேன். மேலும் அவர், "முதல் தடவை தூண்டிலை மெதுவாக இழுக்கவும் அதைப்பற்றி ஒன்றும் கூறாமல் அமைதியாயிருக்கும் படியும் கூறினேன். அது உன் கரங்கள் மீது ஜனங்களின் கைகளை வைக்கும்போது அவர்களின் வியாதிகளை உனக்கு வெளிப்படுத்திக் கூறின போது ஆகும். உன்னிடம் தூண்டிலை வேகமாக இழுத்து பின் அதைப்பற்றி ஒன்றும் கூறாமல் அமைதியாய் இருக்கும்படி கூறினபோது அது நான் சொன்னபடியே உனக்கு ஜனங்களின் இருதயங்களின் இரகசியங் களை அறிந்து வகையறுத்துக் கூறும்படி செய்தேன். அது இரண்டாம் இழுப்பு.

இக்காரியங்களைக் குறித்து அமைதி யாயிருப்பதற்கு மாறாக நீ மேடைகளின் மேல் நின்று இந்த தெய்வீக வரங்களைக் குறித்துப் பொதுவான காட்சியைக் காட்டி விட்டாய். பார் நீ எவ்வளவு மாம்சப் பிரகாரமான போலிபாட்களைத் தோன்றச் செய்து விட்டாய்" என்றார். நான் மிகவும் சத்தமாய்க் கதறி, "நான் அவ்விதமே செய்துவிட்டேன், நான் வருந்துகிறேன் ஐயா" என்றேன்.

என் தூண்டில் கயிறுகள் என் கால் களைச் சுற்றிக்கொண்டது. என் தூண்டில் என் கைகளில் இருந்தது. நான் கதறிக் கொண்டிருந்த போது தூண்டில் கயிறை நேராக்கும்படி அதை என் பற்களால் கடித்து இழுத்தேன். அப்பொழுது அவர் என்னைக் கடினமாய் உற்று நோக்கி, "நீ இப்படிப்பட்ட நேரங்களில் உன் தூண்டில் கயிறை சுருண்டு விடும்படி செய்யாதே" என்றார். நான் "ஐயா, தூண்டில் கயிறை இனிமேல் ஒரு போதும் சுருண்டு விட

செய்ய மாட்டேன். என் மீது தயவாயிரும்" என்றேன்.

அப்பொழுது நான் இன்னும் சற்று மேலான ஓர் பரிமாணத்திற்குள் செல்வது போல் தோன்றினது. என் கரத்திலிருந்த தூண்டில் கயிறு அரையங்குல அளவுள்ள ஒரு காலணியின் கயிறாக மாறியிருந்தது. நான் ஒரு சிறு பிள்ளையின் காலணியைக் கையில் பிடித்திருந்தேன். அதில் 1/8 அங்குல அளவான துவாரங்கள் இருந்தது. நான் அந்த அரை அங்குல அளவான காலணிகயிறை 1/8 அங்குல அளவான துவாரத்தில் நுழைக்க முயற்சி செய்து கொண்டிருந்தேன். அப்படிச் செய்தபோது காலணிக்கயிற்றின் சில நூலிழைகளை உடைத்திருந்தேன் (கிழித்திருந்தேன்). எனக்கு முன்பாக நின்ற கர்த்தருடைய தூதன் உறுதியாக ஆனால் தயவாக என்னிடம் "நீ என்ன செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறாய்" என்று கேட்டார். நான் "அக்கயிற்றைக் கொண்டு காலணியைக்

கட்ட முயற்சிக்கிறேன்'' என்றேன். அவர் கயிற்றின் தவறான முனையைப் பயன் படுத்தப் பார்க்கிறாய்'' என்றார். நான் கீழே பார்த்து அந்த மறுமுனை ஒரு தகட்டினால் சுற்றப்பட்டு அந்த துவாரத்தில் எளிதாக நுழைய ஏதுவாக மெல்லியதாக்கப் பட்டிருப்பதைக் கவனித்தேன். நான், "ஓ, வருந்துகிறேன் ஐயா, நான் தவறான முனையைப் பயன்படுத்தினதை நான் கவனிக்கவில்லை" என்றேன். "உலகத்துக் குரிய உதாரணங்களைக் கூறாமல் சிறு பிள்ளைகளுக்கு இயற்கைக்கு மேம்பட்ட காரியங்களைப் போதிக்கமுடியாது" என்றார் கர்த்தருடைய தூதன்.

அப்பொழுது இன்னும் சற்று மேலான பரிமாணத்திற்குள் செல்வதாக நான் உணர்ந்தேன். நான் இதுவரை என் வாழ்வில் கண்டிராத மிகப்பெரிய கூடாரத் தில் ஆகாயத்தில் நான் நின்று கொண் டிருந்தேன். எனக்கு கீழாக அமைக்கப் பட்டிருந்த பீடத்தின் மேல் எல்லா

ஜனங்களுக்கும் மேலாக நான் இருந்தேன். நான் பிரசங்கத்தை முடித்தவுடனே பீட அழைப்புக் கொடுத்தேன். அங்கே நூற்றுக் கணக்கான ஜனங்கள் தங்கள் கைகளை மேலே உயர்த்தியவாறு அழுதுகொண் டிருந்தனர். அவர்களிருக்கும் இடத்திற்கு கீழே இறங்கிச் செல்ல நான் முயற்சி செய்து கொண்டிருந்த போதிலும் நான் ஆகாயத்திலேயே தான் இருந்தேன். ஒரு உண்மையான, தயவுள்ள, நல்ல தோற்ற முள்ள ஒரு மனிதர் ஜனங்களுக்கு முன்பாக வந்து, அருமை நண்பர்களே, நமது சகோதரன் பிரன்ஹாம் இந்த அற்புதமான பீட அழைப்பை முடித்து சற்று ஒரு கணம் ஓய்வு எடுத்துக் கொண் டிருக்கும் இவ்வேளையில் வலது பக்கமாக ஒரு ஜெபவரிசையை அமைப்போம்" என்றார். என்னால் காணக்கூடிய தூரம் வரை கூடாரத்தின் உள்ளேயும் வெளியே யும் தெருவிலும் அதனைக் கடந்து செல்லும் தூரம் வரையும் ஜனங்கள்

திரண்டிருக்கும் ஜெபவரிசை அமைக்கப் பட்டது. தோல் துணியாலான வேலி யமைப்பு நான்கு அடி உயரமானதாகவும் ஒரு நுழைவாயிலை உடையதாகவும் கூடாரத்தின் உட்புறத்தில் அமைக்கப்பட் டிருந்ததை நான் கண்டேன்.

அந்த வேலியமைப்பினுள் சதுரவடி வான சிறிய மரப்பெட்டி அறை ஒன்று இருந்தது. தோல்துணியாலான வேலி யமைப்புக்குள் செல்லும் வாயிலின் அருகில் ஒரு ஸ்திரீ ஒரு சக்கர நாற்காலி யில் ஒரு ஸ்திரீயை வைத்துக்கொண்டு அவளுடைய பெயரையுடைய ஒரு ஜெப அட்டையையும் வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாள். அந்தத் தள்ளுவண்டிக் குப் பின்பக்கமாக ஒரு மனிதன் கக்கத் தண்டங்களுடன் இருந்தான். அந்த ஸ்திரீ அந்த மனிதனுடைய ஜெப அட்டையை யும் பெயரையும் வைத்திருந்தாள். ஒரு பலமான மனிதன் வந்து ஸ்திரீ படுக்க வைக்கப்பட்டிருந்த தள்ளுவண்டியை

தோல் துணியாலான வாயிலினூடாக அந்தச் சிறிய மரப்பெட்டி அறைக்குள் தள்ளிக் கொண்டுபோய் விட்டான்.

என் ஊழியத்தில் என்னோடு கூடவே யிருக்கும் அந்த ஒளியின் "உஷ்" என்ற எனக்குப் பரிச்சயமான அந்த சத்தத்தை நான் கேட்டேன். அந்த ஒளி என்னிடத் திலிருந்து அந்தச் சிறிய அறைக்குள் சென்றது. கர்த்தருடைய தூதன் இன்னும் ஆகாயத்தில் என் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். அவர், "அங்கே உள்ளே உன்னைச் சந்திப்பேன்" என்றார். அவரு டைய கரம் அந்த சிறிய அறையைச் சுட்டிக் காட்டியதை நான் கண்டேன். மேலும் அவர் "இது என் மூன்றாம் இழுப்பு" என்றார். நான் "இது எனக்குப் புரிய வில்லை" என்றேன். அவர் நான் உன்னை அங்கே சந்திப்பேன்" என்றார்.

நான் கவனித்துப் பார்த்தபோது வியாதியுள்ளவளாயிருந்த ஸ்திரீ சிறிய அறையின் மறுபுறத்திலிருந்த ஒரு வாயி

லின் வழியாக வெளியே வந்தாள். அவள் அப்பொழுது உள்ளே தள்ளிக்கொண்டு போகப்பட்ட தள்ளுவண்டியில் இருக்க வில்லை. ஒரு சகோதரி அவளுடைய சாட்சியைப் பதிவு செய்ய பதிவுசெய்யும் கருவியுடன் (Tape Recorder) நின்றிருந் தாள். சிறிய அறையிலிருந்து வெளியே வந்த ஸ்திரீயிடம் அந்த சகோதரி "அந்தச் சிறிய அறையில் என்ன நிகழ்ந்தது? ″ என்று கேட்டாள். அதற்கு அவள் "எனக்குத் தெரியாது" என்றாள். அதன் பிறகு கக்கத் தண்டங்களைக் கையில் எடுத்துக் கொண்டு அந்த மனிதன் வெளியே வந்தான். அந்த சகோதரி அவனிடன் "அந்தச் சிறிய அறையில் என்ன நிகழ்ந்தது?" என்று வினவினாள். அவன் "எனக்குத் தெரியாது" என்றான்.

கர்த்தருடைய தூதன், இது பொது ஜனங்கள் யாவருக்குமான காட்சி அல்ல. வேதத்திலே நம்முடைய கர்த்தரின் வார்த்தை, நீயோ ஜெபம்பண்ணும் போது

உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து உன் கதவைப் பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற உன் பரமபிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார். மாயக்காரரைப் போல மனுஷர் காணவேண்டுமென்று செய்யாமல் நீங்கள் உங்கள் மறைவிடங் களில் ஜெபியுங்கள்' என்று எழுதப் பட்டிருக்கவில்லையா?" என்றார்.

அப்பொழுது கர்த்தருடைய தூதனும் நானும் சிறிய அறைக்குள் இறங்கினோம். அவர் அங்கு கூறியது, நான் இந்த இரகசியத்தை என் வாழ்நாள் முழுவதும் காத்துக் கொள்ள வேண்டும் என்பதே.

---

ஆதாரம்:

https://wordoflife.in/tamilmessagetracts.html



# மூன்றாம் இழுப்பு

4



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து